மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஆம்.

கூடுதல் வரி.

* 69. வினா—**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் விற்பனை வரிக்கு உட்பட்ட சில பொருட்களின் மீது, மத்திய அரசு, விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் வரி விதிக்க நடவடிக்கை எடுத்து வருவதை, மாநில அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இது குறித்து மத்திய அரசு, மாநில அரசின் கருத்தினைக் கேட்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், இப்பொருள் குறித்து மாநில அரசின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம், அறியும்.

(இ) மற்றும் (உ) ஆம். கேட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ஐந்து பொருள்களின்மீது மத்திய அரசு கூடுதல் வரி விதிப்பதாக அறிகிறோம். இந்தப் பொருள்களின் மூலம் தற்போது நமது அரசுக்குக் கிடைக்கக்கூடிய விற்பனை வரித் தொகை எவ்வளவு ? கூடுதல் வரி விதிப்பதாக மத்திய அரசு ஆலோசனை செய்து, இது குறித்து மாநில முதலமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளதாகவும் அறிகிறோம். அதில் நம் மாநில முதலமைச்சர் அவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். என்றும் அறிகிறோம். எனவே அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? மெஜாரிட்டி கருத்தின் அடிப்படையில் மத்திய அரசு ஒரு முடிவெடுத்துவிட்டால், நமது அரசின் நிலை என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபடி, வனஸ்பதி, மருந்துப் பொருள்கள், சிமின்ட், காகிதம், பெட்ரோல் ஆகியவற்றின் மூலம் நம் அரசுக்கு 1981-82 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 135.6 கோடியாகும். 1982-83 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூபாய் 159.2 கோடியாகும். இப்படிப்பட்ட கூடுதல் ஆயத் தீர்வை போடுவதை நம்முடைய அரசு எற்றுக்கொண்டு வந்திருக்கிறது. 1957-லிருந்து இதைப் போட்டு வந்திருக்கிறார்கள். 1960 ஆம் ஆண்டு இதை எதிர்த்திருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 16, 17 தேதிகளில் மத்திய அரசு மாநில முதலமைச்சர்களைக் கூட்டி கருத்து

1984 மார்ச் 7]

கேட்டார்கள். நமது மாநில முதலமைச்சர் அவர்களின் சார்பில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டுக்குச் சென்று அதை எதிர்த்தார் கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே அதற்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் சார்பில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சென்று எதிர்ப்பு தெரிவித் திருக்கிறார். 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற வல்லுநர் குழு கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று இப்படிப்போடுவதை எதிர்த்திருக்கிறார்கள். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கடைசியாக எடுக்கப் பட்ட முடிவு மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்காமல் ஏகோபித்த முடிவாக வர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய மாநிலத்திற்கு விற்பனை வரி மூலமாக கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் வருமானம் வருவதாக அறி கிறேன். இதிலிருந்து வருவது மட்டும் 150 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. அதாவது கிட்டத்தட்ட கால் பங்கு அளவிற்கு விற்பனை வரியிலிருந்து மட்டும் வருகிறது. ஆகவே எந்த ரூபத்திலும் இந்த விற்பனை வரியை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று திட்டவட்டமாக சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் தீர்மானம் போட்டு மத்திய அரசாங்கத்திற்கு அதை அனுப்ப இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இந்த அரசினுடைய கொள்கை இருக்கின்ற அதிகாரங்களை விட்டுக்கொடுக்க சம்மதிக்காது என் பதுதான். ஆனால் தேவையான அதிகாரங்களைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்வோம். அரசியல்ரீதியான அதிகாரங்களானாலும் சரி, வரி விதிப்பு அதிகாரமானாலும் சரி, நிர்வாக அதிகாரங்களானாலும் சரி முதலில் இருக்கிற அதிகாரங்களைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சி செய்வோம். விட்டுக் கொடுப்பதாக இல்லை.

இரண்டாவது, மேலும் அதிகாரங்களைப் பெறுவது பற்றி மத்திய அரசி னர் நம்மிடமுள்ள அதிகாரங்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொண் டிருக்கிறார்கள். இந்த முயற்சியை இந்த அரசு என்றைக்கும் எதிர்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தப் பிரச்சினை மீது சமீபத்திலே நடந்து முடிந்த முதலமைச்சர்கள் மாநாட்டிற்குப் பிறகு மீண்டும் ஒரு கூட்டத்தைப் கூட்டப் போவதாக ஒரு வாரத்திற்கு முன்பு மத்திய நிதி அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அறிவித்திருக்கிறார். இதை எதிர்த்து நாம் ஏற்கெனவே நம்முடைய நிலையைத் தெளிவாகக் கூறிய பிறகும் மீண்டும் எதற்காகப் பேசுவது? நாம் பேசி முடித்தாகிவிட்டது. மீண்டும் பேச அழைக்கிறார்கள் என்றால், ஒரு நிர்ப்பந்தத்தை உண்டாக்க மத்திய அரசு முயற்சிக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை எழுத்து மூலமாகவுள்ள தீர்மானத்தைச் சொல்லு கிறேன். இப்படி வரி விதிப்பை மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசு எடுத்துக்கொள்வதை மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்காமல் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். அப்படி பார்த்தால் மெஜாரிட்டி முதலமைச் சர்களிடத்திலேதான் இருக்கிறது. ஆகவே மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்காமல் எல்லா முதலமைச்சர்களும் ஏற்றுக்கொண்ட பிறகுதான் முடிவு எடுக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு, எல்லோரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் நிதியமைச்சர் அவர்களும் கை யெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதை அவர்கள் மீறினால், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குப் புரிய வில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கூடுதல் வரி விதிப்பதற்கு மத்திய அரசு என்ன காரணங்களைச் சொல்லியிருக்கிறது? எந்தக் காரணங்களின் அடிப் படையில் இந்த நிலை தேவையென்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது? இந்தச் சூழ்நிலையில் இந்த அரசின் நிலைமை என்ன, மற்ற மாநில அரசு களின் நிலைமை என்ன என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதற்கு என்ன சூழ்நிலை என்று அவர்கள் சொல்லுகிறார்கள் என்றால், வியாபாரிகளுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதுதான். வியாபாரிகளுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்க நாம் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். நாம் கொடுக்கும் காரணம் இங்கேயுள்ள வியாபாரிகள், இங்கே உபயோகப்படுகிற பொருள்கள், அந்தப் பொருள்களை வாங்குபவர்களுடைய சக்தி, அவற்றுக்குள்ள தேவை ஆகிய நிலைமைகளையெல்லாம் பார்த்து வரி விதிப்பதற்கும், குறைப்பதற்கும், கூடுதலாக்குவதற்கும் அதிகாரம் மக்களி

டையே நேரிடையாகத் தொடர்புள்ள மாநில அரசுக்குத்தான் இருக்க வேண்டும் என்பது. மத்திய அரசு இதிலே தலையிடுவது என்பது நியாயமற்றது என்று மிகக் கடுமையாகத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், இப்படித் தலையீடுவது என்பது மாநில அரசைப பஞ்சாயத்தாக ஆக்குவதற்கு எடுக்கும் முயற்சி என்பதையும் திட்டவட்டமாக நாம் கொடுத்துள்ள அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தோடு, மத்திய அரசினுடைய தரப்பிலிருந்து தரப்பட்ட தகவல்கள்படி வரி வசூலும், வரி விதிப்பு வியாபாரிகளுக்கு அதிகமான சங்கடங்களை ஏற்படுத்தாமல் குறைப்பதற்கும் என்ற அளவிலே இருக்கிறபடியினாலே, அதிகார மயமாக்கல் அல்லது அதிகாரத்தை எடுத்துக்கொள்வது என்கிற ஒரு நிலைமை இருந்தாலும் கூட, இன்னொரு பக்கம் மக்களுடைய நலன் கருதிச் செய்யப்படுகிறது என்ற காரணத்தினாலே, இதுபற்றி வியாபாரிகளுடைய கருத்தை அறிவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வியாபாரிகளும் மக்கள்தான். நாமும் மக்கள்தான். இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறபோது, நான் எவ்வளவு பணிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மத்திய அரசுக்கு மாநில அரசை ஒரு முனிசிபாலிடியாக ஆக்கவேண்டுமென்ற நோக்கம்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, மத்திய அரசு, வியாபாரிகள் கஷ்டப்படக் கூடாது என்று கவலைப்படுவதாக நம்முடைய அரசு கருதுகிறதா அல்லது சேல்ஸ் டாக்ஸ் இல்லாமல் அடிஷனல் லெவி போட்டால் நேரிடையாக அவர்கள் கையிலே பணம் போய்ச் சேரும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே நான் சொல்வது, நீண்ட காலமாக அரசியல் அனுபவம் உடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகப் புரிந்திருக்குமென்று கருதுகிறேன். மத்திய அரசு இதைப் போடுவது, மறைமுகமாகவோ நேர்முகமாகவோ மாநிலத்தில் இருக்கிற அதிகாரங்களை எடுத்துக் கொண்டு அவர்களையே எதிர்பார்த்து இருக்க வேண்டும் என்கின்ற உணர்வுகளை பின்னணியாகக்கொண்டு இருக்குமோ என்று கருதுகிறேன்.